

# பெற்றோர்கள் கவனத்திற்கு

## புதுச்சேரி காவல்துறை

- குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து வரும்போது பத்து நிமிடத்திற்கு முன்கூட்டியே வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.
- குழந்தைகள் பள்ளிக்கு உள்ளே செல்கின்றார்களா என்பதனை சரியாக கவனித்து வர வேண்டும்.
- பள்ளித் தொடங்கும்போதும், முடியும்போதும் பள்ளி நிர்வாகம் பள்ளி அலுவலர்களைக் கொண்டு சாலை ஓரத்தில் ஒழுங்குபடுத்த வேண்டும்.
- குழந்தைகளை அழைத்து செல்லும்போது யாராவது பின் தொடர்ந்து வருகின்றனரா என்பதை தெரிந்து கொள்வதுடன் ஏதாவது அசம்பாவித சம்பவம் நடந்தால் அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு தெரிவிக்க வேண்டும்.
- குழந்தையை அழைத்துச் செல்ல தவிர்க்க முடியாத தாமதம் ஆகும்போது பள்ளி நிர்வாகத்திடம் தாமதத்திற்கான காரணத்தை தெரிவித்து குழந்தையை பாதுகாப்புடன் வைத்திருக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும்.
- பெற்றோர்கள் குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி பள்ளிக்கூடம் பாதுகாப்புடன் செல்வது பற்றியும் போக்குவரத்து விதி பற்றியும் பள்ளியை விட்டு வெளிவரும்போதும் அறியாத நபரிடம் பேசுவதும் அவர்கள் அழைத்து வர ஒப்புகைக்கு உட்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- கைபேசி (Cell), தொலைபேசி (Telephone) ஆகியவற்றை குழந்தைகள் பேசுவதை கூடியவரை அனுமதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பேசுவதை தவிர்க்கும்படி அறிவுறுத்த வேண்டும். அறியாத எண், தவறுதலான அழைப்பு (Missed Call) ஆகியவற்றிற்கு உரிய பதிலைத் தர மறுப்பதுடன் மீண்டும், மீண்டும் தெரியாத எண் வரும்போது அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு தெரிவிக்க வேண்டும்.
- படிக்கும் குழந்தைகளுக்கு நேரடியாகவோ, தொலைத் தொடர்பு மூலமாகவோ, வெளிநபர் மூலம் மிரட்டல் ஏற்பட்டால் உடனே காவல் நிலையத்திற்கு தெரிவிக்க வேண்டும்.
- பெற்றோர்கள் தாங்கள் குழந்தைகளை ஆட்டோ மற்றும் தனியார் வாகனத்தில் பள்ளிக்கு அனுப்ப ஏற்பாடு செய்யும்போது மேற்கண்ட வாகன ஓட்டுநர்களைப் பற்றி விசாரித்து நல்லவரை மட்டும் தேர்வு செய்ய வேண்டும். மேற்படி வாகனங்களின் ஓட்டுநர்களை அடிக்கடி மாற்றுவதை தவிர்க்க வலியுறுத்தவும்.
- ஓட்டுநர்களின் கைபேசி (Cell) எண் உட்பட முழு விவரத்தையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

## பெற்றோர்கள் / ஆசிரியர்கள் சங்கத்தின் கவனத்திற்கு

- பெற்றோர்கள் சங்கம் ஒவ்வொரு மாதமும் குழந்தைகள் நலன் கருதி கலந்தாய்வு கூட்டம் நடத்த வேண்டும்.
- மாதாந்திர கூட்டத்தில் அனைத்து பெற்றோர்களும் கலந்துகொள்ளும்படி அறிவுறுத்த வேண்டும்.
- பள்ளி நிர்வாகத்துடன் கலந்து பெற்றோர்கள் சங்கம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி குழந்தைகளின் நலனை காக்க வேண்டும்.

### POLICE NUMBERS

| | |
|---|---|
| SSP (Law & Order) | 9489205002 |
| SP (North) | 9489205005 |
| SP (South) | 9489205006 |
| SP (Rural) | 9489205007 |
| SP (Traffc) | 9489205008 |

| | |
|---|---|
| CI Villianur | 9489205024 |
| SHO Villianur | 9489205152 |
| SHO Mangalam | 9489205146 |
| SHO Karikalampakkam | 9489205151 |
| Control Room | 100 |

| | |
|---|---|
| Villianur PS | 2666321 |
| Mangalam PS | 2666356 |
| Karikalampakkam PS | 2665348 |
| AWPS (Villianur) | 2660385 |
| Traffic (Villianur) | 2661246 |

அமஅபு.—137/8 —3,000 பிரதிகள் (182)—31-1-2013.